[1982 பிப்ரவரி 2

சேடபட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குழந்தைகள் நல காப்பகங்கள்.

*வினா எண் 19— திரு. இரா. முத்தையா: மாண்புமிகு சமூக லத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாவட்டம் சேடபட்டி ஊராட்சி ஒன்றியத்தில் எத்தனை பாலர் பள்ளிகள் உள்ளன?

(ஆ) அப்பகுதியில் ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு பாலர் பள்ளி தொடங்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) சேடபட்டி ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் ஏழு குழந்தைகள் நல காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) இல்லை.

தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டங்கள்.

*வினா எண் 20— திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை, திருச்சி, கோவை, மதுரை மாவட்டங்களில் தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டம் ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) ஏற்கனவே தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டங்கள் தஞ்சை, திருச்சி மற்றும் மதுரை மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) இவ்வினா எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (* உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

(முற்பகல் 11-20)

(3) அறிவிப்புகள்.

(அ) மதுரை காமராஜ் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மதுரை காமராஜ் பல்கலைக் கழகப் பேரவையில் (Senate) இச்சட்டப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த